# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP II & IIA

## UNIT - II

## மாநில நிதி நிர்வாகம்

### 1. மத்திய மாநில வரவு செலவு திட்டம்

- ✓ இந்தியா ஓர் கூட்டரசு பொருளாதாரமாக விளங்குவதால் அரசின் வரவு செலவு திட்டம் அரசின் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி மத்திய அரசு வருடாந்திர நிதி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். ஷரத்து 112 ன் படி மத்திய வரவு செலவு திட்டம் பாராளுமன்றத்திலும், ஷரத்து 202ன் படி ஒவ்வொரு மாநில அரசும் சட்டமன்றத்திலும் தாக்கல் செய்யவேண்டும்.

**வரவு செலவு திட்டத்தின் வகைகள்**

- ✓ வருவாய் மற்றும் மூலதன வரவு செலவு திட்டம்.
- ✓ வருவாய் கணக்கு மற்றும் பிற கணக்குகளின் மீதான செலவு அடிப்படையில் வரவு செலவு திட்டம் இரு வகைகளில் சமர்பிக்கப்படுகிறது.

**i. வருவாய் வரவு செலவுதிட்டம்:**

- ✓ இது வருவாய் வரவுகள் மற்றும் வருவாய் செலவினங்களைக் கொண்டது. இது வரி வருவாய் மற்றும் வரி சாரா வருவாய் என வகைபடுத்தப்படுகிறது. வருவாய் செலவினங்களை திட்டம் சார்ந்த செலவினம் மற்றும் திட்டம் சாரா செலவினங்களாக வகைப் படுத்தபடுகிறது.

**ii. மூலதன வரவு செலவு திட்டம்:**

- ✓ அது மூலதனவரவுகள் மற்றும் மூலதனச் செலவுகளை உள்ளடக்கியதாகும். மூலதன வரவின் முக்கிய ஆதாரங்களாக கடனகள், முன்பணம் போன்றவை உள்ளது. மூலதன செலவினத்தை திட்டம் சார் செலவினம் மற்றும் திட்டம் சாரா மூலதனச்செலவு என வகைப்படுத்தபடுகிறது.

**iii. துணைவரவு செலவுத் திட்டம்**

- ✓ போர்க்காலம் மற்றும் சுனாமி, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின் போது செலவுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போதுமானதாக இருப்பதில்லை. இந்த எதிர்பாராத சூழ்நிலையை சமாளிப்பதற்காக அரசினால் துணைவரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்.

**iv. நிதிக்கு வாக்கெடுப்பு**

- ✓ வரவு செலவுத் திட்டம்: இந்திய அரசியலமைப்பு ஷரத்து 116ன் படி, பட்ஜெட் வருட மத்தியில் சமர்ப்பிக்கப்படும் இதற்கு அரசியல்காரணம் இருக்கிறது. இருக்கக்கூடிய அரசானது தேர்தல் காரணமாக அந்தவருடம் முழுவதும் தொடர்ந்தோ தொடராமலோ இருக்கலாம். இதனால் அந்த அரசு தாக்கல் செய்யும் வரவு செலவுத் திட்டம்''நொண்டி வாத்து வரவு செலவுத் திட்டம்'' என அழைக்கப்படுகிறது. இது நிதிக்கு வாக்கெடுப்பு வரவு செலவுத் திட்டம் எனவும் அழைக்கப்படுகிறது.
- ✓ சிறப்பு நிகழ்வாக நிதிக்கு வாக்கெடுக்கும் வரவு செலவுத் திட்டமான அவசியமான இனங்களுக்கு பாராளுமன்ற ஒப்புதல் பெறும் வரை செலவு மேற்கொள்ள அனுமதி உள்ளது. வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் ஒப்புதல்பெறும் வரை தொகுப்பு நிதியிலிருந்து பணம் பெற்றுக்கொள்ள சட்டரீதியான அனுமதி உள்ளதை வாக்கெடுக்கும் வரவு செலவுத் திட்டம் என அழைக்கப்படுகிறது. இத்தகைய அனுமதி அதிகபட்சம் இரண்டு மாதங்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

**v. பூஜ்யவரவு செலவுத் திட்டம்**

- ✓ இந்திய அரசு 1987 –88 ல் பூஜ்ய வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்தது. இதில் ஒவ்வொரு செலவினமும் புதியதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும். புதிய இனமாக கருதப்பட்டு அரசு பட்ஜெட்டில் புதிதாக செலவு மதிப்பீட்டை கொண்டுள்ளது. சமூகத்தின் முந்தைய முன்னுரிமைகளை சமூக பொருளாதார நோக்கங்களின் பார்வையில் மறுஆய்வு செய்யப்பட்டு நியாயப்படுத்தும்.

**vi. செயல்திறன் வரவு செலவுத்திட்டம்**

- ✓ எந்த ஒரு வரவு செலவு திட்டத்தின் வெளியீட்டின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டம் அமைந்தால் அது செயல்திறன் வரவு செலவுத் திட்டம் என அழைக்கப்படுகிறது. இது உலகில் முதன் முதலில் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது. சர் உப்பர் தலைமையில் அமெரிக்காவில் 1949-ல் நிர்வாக சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டது. இந்தகுழுவின் பரிந்துரையின் படி செயல்திறன் வரவு செலவுத் திட்டம் அமெரிக்காவில் அமைக்கப்பட்டது. மக்களின் நலனுக்காக இந்தவரவு செலவுத் திட்டத்தில்'' என்ன செய்தோம்''. ''எவ்வளவு செய்தோம்'' என்பதை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். இந்தியாவில் செயல்திறன் வரவு செலவுத் திட்டத்தை''சாதனைத் திட்டம்'' என அழைக்கப்படுகிறது.

vii. **சமநிலை மற்றும் சமனற்ற வரவு செலவுத் திட்டம்**

**அ. சமநிலைவரவு செலவுத் திட்டம்**

- ✓ ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசு எதிர்பார்க்கிற வருவாயும் திட்டமிடப்பட்டுள்ள செலவும் சமமாக இருந்தால் அது சமநிலை வரவு செலவுத் திட்டம் எனப்படும்.

**ஆ. சமநிலையில்லா வரவு செலவுத் திட்டம்**

- ✓ அரசு எதிப்பார்க்கிற வருவாயும் திட்டமிடப்பட்டுள்ள செலவும் சமமாக இல்லாது இருந்தால் அது சமநிலையில்லா வரவு செலவுத் திட்டமாகும்.

**சமநிலையற்ற வரவு செலவுத் திட்டம் இருவகைப்படும்.**

**1.உபரி வரவு செலவுத் திட்டம்.**

- ✓ ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசு எதிர்பார்க்கிற வருவாய் திட்டமிடப்பட்டுள்ள செலவை விட அதிகமாக இருந்தால் அது உபரி வரவு செலவுத் திட்டம் எனப்படும்.

உபரி வரவு செலவுத் திட்டம் = அரசு எதிர்பார்க்கிற வருவாய் > திட்டமிடப்பட்டுள்ள செலவு

**2. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்.**

- ✓ ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசு எதிர்பார்க்கிற வருவாய் திட்டமிடப்பட்டுள்ள செலவைவிட குறைவாக இருந்தால் அது பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் எனப்படும்

பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் = அரசு எதிர்பார்க்கிற வருவாய் < திட்டமிடப்பட்டுள்ள செலவு

## 2. வரவு செலவு திட்டசெயல்முறைகள்

- ✓ வரவு செலவு திட்டசெயல்முறைகள் என்பது வரவு செலவு திட்டத்தைதயாரிப்பது, தாக்கல்செய்வது மற்றும் செயல்படுத்துவது ஆகியவற்றைஉள்ளடக்கியதாகும்.

**(அ) வரவு செலவுத் திட்டம் தயாரித்தல்**

- ✓ மைய அரசு வரவு செலவு திட்டத்தைத்திய நிதி அமைச்சகம் தயாரிக்கிறது. மாநில அரசு வரவு செலவுத் திட்டத்தை மாநில நிதித்துறை தயாரிக்கிறது. வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது, கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை கவனத்தில் கொள்ளப்படுகிறது.
  - ✓ பேரியல் பொருளாதார கொள்கை இலக்குகளைதிட்டகாலத்திற்குள் அடைதல்.
  - ✓ வரவு செலவுத் திட்டத்தின் யுக்திகள்.
  - ✓ பல்வேறு திட்டங்களுக்கான நிதித் தேவைகள்.
  - ✓ வருவாய் செலவினத்தின் மதிப்பீடு (பாதுகாப்பு செலவினம், மானியம், கடனுக்கானவட்டி செலுத்தல்கள் போன்றவை).
  - ✓ மூலதன செலவினத்தின் மதிப்பீடு (இரயில்வே, சாலை, பாசனவளர்ச்சி போன்றவற்றிற்காக).
  - ✓ வரி மற்றும் வரியற்ற வருவாய் வரவுகளின் மதிப்பீடு.
  - ✓ கடன்களின் திரும்ப செலுத்தல்கள், பொதுத்துறையின் முதலீட்டு குறைப்பு, அங்காடி பெறுதல்கள் போன்ற மூலதன வரவுகளின் மதிப்பீடு.
  - ✓ வருவாய் வரவுகளுக்கும் வருவாய் செலவுகளுக்கும் இடையேயான இடைவெளியின் மதிப்பீடு.
  - ✓ நிதி பற்றாக்குறை, முதன்மை பற்றாக்குறை, மற்றும் வருவாய் பற்றாக் குறையின் மதிப்பீடு.

**(ஆ) வரவு செலவு திட்டம் தாக்கல் செய்தல்**

- ✓ நடுவன் அரசின் அங்கத்தினராக, நிதி அமைச்சர் மைய அரசின் வரவு செலவுத் திட்டத்தை புதிய நிதி ஆண்டு துவங்கும் முதல்நாள் பாராளுமன்றத்தில்தாக்கல்செய்வார். மாநில அரசுகளின் நிதி அமைச்சர்களும் அவ்வாறே அங்காங்கே செய்வார்கள்.
- ✓ இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, பண மசோதா (Money Bill) கீழ் சபையில் தொடங்கப்படும். மைய அரசில், எல்லாபண மசோதாக்களும் முதலில் மக்களவையிலும், மாநிலங்களில் சட்டப் பேரவையிலும் தாக்கல் செய்யப்படும். வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு வரி சார்ந்த கருத்துருக்களும் இடம் பெற்றிருக்கும். நிதி மசோதா நிறைவேற்றப்பட்டபின்னர், வாக்களிப்பிற்குப் பின் சட்டவடிவம் கொடுக்கப்படும். இதனடிப்படையில் செலவுகளை அங்கிகரிக்கப்படும். இந்த வழிமுறையில் தான் இந்தியாவில் வரவு செலவுத் திட்டம் தாக்கல்செய்யப்படுகிறது

**இ) வரவு செலவுத் திட்டத்தை செயல்படுத்துதல்**

- ✓ வரவு செலவுத் திட்டத்தை அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்துகிறது. வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவது தான் மிக முக்கியமானதாகும்.

**வரவு செலவு திட்டத்தில் பாராளுமன்றக் கட்டுப்பாடுகள்**

இந்தியாவில் அரசுக் கணக்குகள் கீழ்க்கண்ட மூன்று முறைகளில் பராமரிக்கப்படுகிறது.

- ✓ தொகுப்பு நிதி
- ✓ அவசர நிதி
- ✓ பொதுக் கணக்கு

**வரவு செலவுத் திட்டத்தைகட்டுப்படுத்தும் பாராளுமன்றகுழுக்கள்**

- ✓ பொதுக் கணக்கு குழு
- ✓ மதிப்பீட்டுக் குழு

இந்தக் குழுக்கள் எந்த அமைச்சகமும் அல்லது துறையும் அனுமதிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக செலவிடாமல் தொடர்ந்து கண்காணிக்கும்.

## 3. வரவு செலவுத் திட்டபற்றாக்குறைகள்

- ✓ வரவு செலவுத் திட்டபற்றாக்குறை என்பது வரவு செலவு திட்டத்தில் உள்ள வருவாய் செலவைவிட குறைவாக இருப்பதாகும். இந்தநிலையைஅரசு பற்றாக்குறை எனவும் அழைக்கப்படும்.

இந்திய அரசின் வரவு செலவுத திட்டத்தில்நான்கு வகையானபற்றாக்குறைகள் உள்ளன.

(அ) வருவாய்பற்றாக்குறை

(ஆ) வரவு செலவுத் திட்டபற்றாக்குறை

(இ) நிதிப் பற்றாக்குறை

(ஈ) முதன்மைப் பற்றாக்குறை

**அ. வருவாய் பற்றாக்குறை**

- ✓ அரசின் வருவாய் செலவினம், வருவாய் வரவை விட அதிகமாக இருந்தால்அது வருவாய்பற்றாக்குறை எனப்படும். இதில் மூலதன வரவு மற்றும் மூலதனச் செலவை கணக்கில் கொள்ளப்பட மாட்டாது. வருவாய் பற்றாக்குறை என்பது அரசின் அன்றாட பணிகளை நடத்துவதற்கு தேவையானதை விட குறைவாக உள்ளதைக் காட்டுவதாகும்.

வருவாய் பற்றாக்குறை (RD) = மொத்த வருவாய் செலவினம் (RE) – மொத்த வருவாய் வரவுகள் (RR)

RE – RR > 0 ஆக இருக்கும்.

**. வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை**

வருவாய் மற்றும் மூலதனக் கணக்குகளின் மொத்த வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியே வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையாகும்.

வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை= மொத்தச் செலவு – மொத்த வரவு

**இ. நிதிப் பற்றாக்குறை**

நிதிப் பற்றாக்குறை = வரவு செலவுத் திட்டபற்றாக் குறை – அரசின் அங்காடிக் கடன்களும் ஏனைய பொறுப்புக்களும்

எனவே நிதிப் பற்றாக்குறை என்பது வரவு செலவு பற்றாக் குறையை விட அதிகமானதாகும்.

**ஈ. முதன்மைப் பற்றாக்குறை**

- ✓ முதன்மைப் பற்றாக் குறையானது நிதி பற்றாக் குறையிலிருந்து வட்டி செலுத்தலை கழித்தபின் உள்ள பற்றாக் குறையாகும். இது அரசின் உண்மையான சுமையை காட்டும். மேலும் இதில் முன்னர் வாங்கிய கடனுக்கான வட்டியை கணக்கில் கொள்ளாது. எனவே முதன்மைப் பற்றாக்குறை என்பது அரசின் கடனுக்கான குறிப்பாக வட்டி செலுத்தலுக்கான தேவையைக் குறிக்கும்.

எனவே நிதிப் பற்றாக்குறை முதன்மைப் பற்றாக் குறையை விட அதிகமாக இருக்கும்.

முதன்மைப் பற்றாக் குறை (PD) = நிதிப்பற்றாக் குறை (FD) – வட்டி செலுத்துதல் (IP)

## 4. கூட்டமைப்பு நிதி

- ✓ கூட்டாட்சி நிதி என்பது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே வருவாய் வளங்களை ஒதுக்கீடு குறித்த தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கும். இது மத்திய மாநில அரசுகள் தங்களுக்கென ஒதுக்கபட்ட பணியினை திறமையாக செய்யவளங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.
  - ✓ அதிகாரங்கள் பிரிவு: நமது அரசியலமைப்பில், அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. எனவே அதன் வரம்புகளைமீறுவதும், மற்றவர்களின் செயல்பாடுகளை ஆக்கிரமிப்பதை தவிர்த்து அவரவர் சொந்த பொறுப்புகளில் செயல்படுவதற்கும் வழிவகை செய்யப்படுகிறது. அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் மூன்று பட்டியல்கள் உள்ளன. அவை: மத்திய பட்டியல், மாநில பட்டியல் மற்றும் இணைப்புப் பட்டியல்.
  - ✓ மத்திய பட்டியலில் பாதுகாப்பு, ரயில்வே, தபால்மற்றும் தந்தி முதலிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 100 இனங்களைக் கொண்டுள்ளது
  - ✓ மாநில பட்டியலில் பொது நலன், காவல் போன்ற 61 இனங்களைக் கொண்டுள்ளது
  - ✓ இணைப்புப் பட்டியலில் 52 – இனங்கள் மத்திய மற்றும் மாநிலங்களுக்கு பொதுவாக உள்ளது. இதில் மின்சாரம், தொழிற் சங்கம், பொருளாதார மற்றும் சமூகத் திட்டங்கள் போன்றவை உள்ளடங்கும்.

## 5. மத்திய, மாநில அரசின் பணபங்களிக்கும் உறவு வருமான வழிகள்

- ✓ மைய அரசின் வருவாய் மூலங்கள் மைய அரசின் வரி மற்றும் வரியில்லா வருமான வழிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் மிக முக்கியமானவை.
- ✓ தொழில் நிறுவனங்கள் மீதானவரி
- ✓ பணம், நாணயங்கள் மற்றும் அந்நியச் செலவாணி
- ✓ சுங்கவரி ஏற்றுமதி வரி உட்பட
- ✓ புகையிலை மற்றும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ஏனைய பொருட்களுக்கான கலால் வரி.
- ✓ வேளாண்மை நிலங்கள் தவிர்த்த பண்ணைவரி
- ✓ நீதிமன்றங்கள் விதிக்காக மத்திய பட்டியலில் உள்ள இதர கட்டணங்கள்.
- ✓ அயல் நாட்டு கடன்கள்.
- ✓ இந்திய அரசால்அல்லது மாநிலங்களால் அமைக்கப்பட்டலாட்டரி சீட்டுகள்.
- ✓ தபால் துறையின் சேமிப்பு வங்கி.
- ✓ தொலை தொடர்பு துறையின் வருவாய்கள்
- ✓ மத்திய அரசுக்கு சொந்தமானசொத்துக்கள்
- ✓ மத்திய அரசின் பொதுக்கடன்
- ✓ இரயில்வே

- ✓ மாற்றுச் சீட்டுகள், காசோலைகள் மற்றும் உறுதிமொழி பத்திரங்கள் மீதான வில்லைக் கட்டணம்.
- ✓ இந்திய ரிசர்வ்வங்கி
- ✓ வருமானவரி (வேளாண் வருவாய்தவிர்த்து)
- ✓ சொத்துக்களின் மூலதன மதிப்பில் விதிக்கப்படும் வரி (தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் விவசாய நிலம் தவிர)
- ✓ பங்குச் சந்தை மற்றும் எதிர்கால சந்தை பரிவர்த்தனைகளில் முத்திரை வரிகளை தவிர வேறு வரி.
- ✓ செய்திதாள் மீதானவரி (அதில் வெளியிடும் விளம்பரம் உட்பட)
- ✓ இரயில், கடல்வழி மற்றும் ஆகாய மார்க்கமாக செல்லும் பயணிகள் மற்றும் சரக்குகள் மீதானவரி.

**மாநில வளங்கள்**

- ✓ தலவரி.
- ✓ வேளாண் நிலங்கள் மீதானவரி
- ✓ மது மற்றும் போதைப் பொருட்கள் மீதான கலால் வரி
- ✓ பண்ணை வரி (விவசாய நிலங்கள்)
- ✓ நீதிமன்றங்கள் விதிக்காக மாநில பட்டியலில்உள்ள இதர கட்டணங்கள்
- ✓ நில வருவாய்
- ✓ மத்தியப் பட்டியலில் இல்லாத ஆவணங்களுக்கான வில்லைக் கட்டணம்.
- ✓ வேளாண் வருமானவரி
- ✓ நிலம் மற்றும் கட்டிடங்கள் மீதானவரி
- ✓ கனிம வளங்கள் எடுப்பதற்கான உரிம வரி.
- ✓ மின்சார நுகர்வு மற்றும் விற்பனைக்கான வரி
- ✓ உள்ளூர் பகுதியில் நுகர்வு மற்றும் விற்பனை பொருட்களுக்கான நுழைவு வரி.
- ✓ செய்தித்தாள் தவிர்த்த இதர பொருட்கள் மீதான விற்பனை வரி
- ✓ செய்தித்தாள் தவிர்த்த இதர விளம்பரங்கள் மீதானவரி.
- ✓ சாலைமற்றும் நீர்வழி மார்க்கமாக எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் மற்றும் பயணிகள் மீதானவரி
- ✓ வாகனவரி.
- ✓ விலங்குகள் மற்றும் படகுகள் மீதானவரி.
- ✓ வியாபாரம் மற்றும் தொழிலாளர்கள் மீதானதொழில்வரி.
- ✓ பொழுதுபோக்குகள் மற்றும் சூதாட்டங்கள் மீதானவரி.
- ✓ சாலைசுங்ககட்டணம்.

**மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்கள் (சரத்து 269 –ன் படி)**

- ✓ விவசாய நிலம் தவிர்த்த இதர சொத்துகள் மீதானவரி
- ✓ பண்ணைவரி (வேளாண்மை நிலம் தவிர்த்த)
- ✓ இரயில்வே கட்டணங்கள் மற்றும் சரக்கு கட்டணங்கள்.
- ✓ பங்குச்சந்தை மற்றும் எதிர்கால சந்தை பரிவர்த்தனைகளில் முத்திரை வரிகளை தவிர வேறு வரி.
- ✓ செய்திதாள் மீதானவரி (அதில் வெளியிடும் விளம்பரம் உட்பட)
- ✓ இரயில், கடல்வழி மற்றும் ஆகாய மார்க்கமாக செல்லும் பயணிகள் மற்றும் சரக்குகள் மீதானவரி.
- ✓ மாநிலங்களுக்கிடையேயானபண்டங்கள் விற்பனை மற்றும் வாங்குதல் மீதான வரி (செய்தித்தாள் தவிர)

**மத்திய அரசால் விதிக்கப்பட்டு, ஆனால் மாநில அரசு வசூலிப்பது மற்றும்** பயன்படுத்துவது **(ஷரத்து 268)**

வில்லை கட்டணம் மற்றும் சுங்கவரி மருத்தவ மற்றும் கழிவறை மீதானவரி (மத்திய பட்டியலில் குறிப்பிட்டுள்ளது) இந்திய அரசு விதிக்கும். ஆனால்

- ✓ யூனியன் பிரதேசங்களில் இந்திய அரசே வசூலிக்கும்.
- ✓ மற்ற வகையில், மாநிலங்களே அவைகளை விதிக்கும்.

**மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கக் கூடிய வரிகள் (சரத்து 270 மற்றும் 272 –ன் படி)**

- ✓ வேளாண்மை வருவாய் தவிர்த்த இதர வருமான வரி வருவாய்.
- ✓ இந்திய அரசின் மத்தியப் பட்டியலில் உள்ள மத்திய கலால் வரி (மருத்துவ மற்றும் கழிவறை மீதான வரி தவிர்த்த) வருமானவரியில் நிறுவனங்கள் மீதான வரி உள்ளடக்கப்படவில்லை.

வருமான வரி மாநகராட்சி வரியை உள்ளடக்கியது அல்ல. நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வருமானவரி மத்திய மற்றும் மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது.

## 6. நிதிக்குழுவின் வரலாறு

இந்திய அரசியலமைப்பு ஷரத்து 280-ன் படி நிதிக்குழு பகுதி சட்டபூர்வ அமைப்பாகும். இது 1951-ம் ஆண்டு மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையே நிதி உறவை வரையறுப்பதற்கு அமைக்கப்பட்டது.

- ✓ நிதிக்குழு மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான சமநிலையின்மையக் குறைப்பதற்கும் (செங்குத்து சமநிலையின்மை) மற்றும் மாநிலங்களுக்கிடையேயான சமமின்மையைக் குறைப்பதற்கும் (படுகிடை சமநிலையின்மை) முயல்கிறது. இது உள்ளுணர்வினை ஊக்குவிக்கிறது.
- ✓ நிதிக் குழு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அது அமைக்கப்படுகிறது. இது ஒரு தற்காலிக அமைப்பாகும்.
- ✓ 14வது நிதிக்குழு 2013-ல் அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகள் ஏப்ரல்1, 2015 முதல் மார்ச்2020 வரை செல்லத்தக்கதாகும்.
- ✓ 15-வது நிதிக்குழு நவம்பர் 2017-ல்அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகள் ஏப்ரல்1, 2020 முதல் நடைமுறைப் படுத்தப்படும்.

**இந்திய நிதிக்குழுவின் பணிகள்**

ஷரத்து 280(3) நிதிக்குழுவின் பணிகள் பற்றி கூறுகிறது. இச்ஷரத்தின்படி இக்குழு குடியரசுத் தலைவருக்கு பின்வருவனவற்றைபரிந்துரைசெல்கிறது.

- ✓ மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையே நிகரவரி வருவாய்களைஒதுக்கீடு செய்து, மாநிலங்களுக்கு அவற்றிற்குரிய பங்கை பகிர்ந்தளித்தல். .
- ✓ மத்திய அரசு மாநிலத்திற்கு வழங்கவுள்ள மானிய அளவு பற்றியும் (ஷரத்து 275 (1)) மற்றும் அம்மானியம் பெறுவதற்கு மாநில அரசின் தகுதி குறித்து கொள்கைகளை உறுதி செய்தல்
- ✓ நல்லதிடமான நிதியை நிலை நாட்டும் வண்ணம் இந்திய குடியரசு தலைவரால் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டிய விபரங்கள். ஏனைய பிரச்சனைகளாகிய கடன் நிவாரணம், மாநிலங்களுக்கு வழங்குகிற இயற்கை சீற்றத்திற்கான நிதி, துணை ஆயத்தீர்வைகள் போன்றவைகள்.

## 7. உள்ளாட்சி நிதி

உள்ளாட்சி நிதி எனப்படுவது இந்தியாவில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பற்றியதாகும். இந்தியாவில் பல்வேறு வகையான உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. நம் நாட்டில் தற்போது செயல்பாட்டில் இருக்கக்கூடிய முக்கியமான நான்கு உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன.

**உள்ளாட்சி அமைப்பின் வகைகள்**

**1. கிராம ஊராட்சி.**

**தோற்றம்:**

ஊராட்சியின் எல்லைவரம்பு என்பது ஒரு வருவாய் கிராமமாகும். சிலசமயங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சிறிய கிராமங்கள் ஒரு ஊராட்சியின் கீழ் குழுவாக செயல்படுகிறது. இந்தியாவில் உள்ள பெரும்பாலான மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ் நிறுவப்பட்டுள்ளது.

**பணிகள்:**

- ✓ ஒரு ஊராட்சியின் செயல்பாடுகள் குடிமை, பொருளாதார மற்றும் பலவற்றை உள்ளடக்கியிருக்கும். இதனால்சிறிய இடர்பாடுகள் ஊராட்சியிலேயே அகற்றப்படும்.
- ✓ சாலைகள், தொடக்க பள்ளிகள், கிராம சுகாதார நிலையங்கள் ஆகியவைகள் பஞ்சாயத்துக்களால் நிரிவகிக்கப்படுகிறது
- ✓ குடிநீர் மற்றும் வேளாண்மைக்கு நீர் வழங்கல் அவைகளின் எல்லைக்குள் பொறுப்பாகும் மற்றும் பண்னை பராமரிப்பு, சந்தை, சேமிப்பு கிடங்கு ஆகியவற்றையும் மேலாண்மை செய்கிறது.

**கிராம ஊராட்சிகளின் வருவாய் ஆதாரங்கள்**

கிராம ஊராட்சிகளின் வருவாய் ஆதாரங்கள் பின்வருவனவாகும்.

- பொது சொத்து வரி
- நிலம் மீதானவரி
- தொழில்வரி
- விலங்குகள் மற்றும் வாகனங்கள் மீதானவரி

பிற வரிகளாக சேவைவரி, நுழைவு வரி, திரையரங்கு வரி, புனிதஸ்தலங்கள் வரி, திருமணம் மீதானவரி, பிறப்பு மற்றும் இறப்பு மீதானவரி மற்றும் உழைப்பாளர் மீதானவரி போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. உண்மையில், மாநில அரசின் அனுமதியுடன் மட்டுமே கிராம ஊராட்சிகளால் வரி விதிக்கப்படுகிறது. இந்த அமைப்பு வரி விதிப்பதற்கு சில வரம்புகள் உள்ளன.

**2. மாவட்டவாரியங்கள்அல்லது ஜில்லாஅமைப்புகள்:**

- ✓ **தோற்றம்:** அனைத்து கிராமப் பகுதிகளையும் உள்ளடக்கி மாவட்டவாரியங்கள் மற்றும் ஜில்லா அமைப்புகள் மாவட்ட அளவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியத்தின் வரம்பெல்லை வருவாய் மாவட்டம் ஆகும்.
- ✓ **பணிகள்:** தமிழ்நாட்டில், ஜில்லாஅமைப்பு என்பது மாவட்டஅளவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மாவட்டவாரியத்தின் பணிகளாக கிராம ஊராட்சிகளுக்கு உதவி செய்வது மற்றும் வளர்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துவது போன்றவையாகும்.

**மாவட்டவாரியங்களின் வருவாய் ஆதாரங்கள்**

- ✓ மாநில அரசிடமிருந்து பெறும் மானிய உதவி
- ✓ நிலதீர்வைகள்
- ✓ சுங்ககட்டணம்
- ✓ சொத்திலிருந்து பெறுகிற வருமானம் மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பெறக்கூடிய கடன்கள்
- ✓ வளரச்சிப் பணிகளுக்காக மத்திய அரசு மேற்கொள்ளும் திட்டங்களுக்கான மானியங்கள்
- ✓ பொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகளிலிருந்து பெறப்படுகிற வருமானம்
- ✓ மாநில அரசு ஏற்றுக் கொள்கிற சொத்து வரி மற்றும் பிற வரிகள்

**3. நகராட்சி அமைப்புகள்**

**தோற்றம் மற்றும் பணிகள்:** நகரப் பகுதிகளில்ஏற்படுத்தப்படுகிற இவ்வமைப்புகள் அப்பகுதியல் உள்ள துப்புரவு, பொது சுகாதாரம், சாலைகள், விளக்குகள், குடிநீர் வினியோகம், சாலைகளை தூய்மைப்படுத்துதல், பூங்காக்களைபராமரித்தல், சுகாதார நிலையங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள், பாதாள சாக்கடை வசதி, தொடக்ககல்வி வசதி, பொருட்காட்சி மற்றும் கண்காட்சிகளை அமைத்தல் ஆகிய பணிகளைச்செய்து வருகிறது. ஆயினும், அனைத்து பணிகளும் மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குள் செயல்படுகின்றது.

**நகராட்சி அமைப்புகளின் வருவாய்ஆதாரங்கள்**

- ✓ சொத்து மீதானவரிகள்

- ✓ பொருட்கள் மீதானவரிகள், குறிப்பாக நுழைவு வரி.
- ✓ தனிப்பட்டவரிகள், தொழில்வரி, வியாபாரம், வேலைவாய்ப்பு போன்றவற்றின் மீதானவரிகள்
- ✓ வாகனங்கள் மற்றும் விலங்குகள் மீதானவரிகள்
- ✓ திரையரங்கு வரி
- ✓ மாநில அரசிடமிருந்து பெறுகிற மானிய உதவி

**4. மாநகராட்சி**

தோற்றம் மற்றும் பணிகள்: நகராட்சியைஒப்பிட்டு பார்க்கும்போது, இவைகள் பரந்தஅதிகாரங்களையும், அதிக சுதந்திரத்தையும் பெற்றுள்ளது. குடிநீர் வினியோகம் மற்றும் பாதாள சாக்கடை, தெரு விளக்குகள், சேரிகளை பண்படுத்துதல், நகர் திட்டமிடல் போன்ற பணிகளை செய்கிறது. நகர மக்கள் தொகை அதிகரித்து வருகிற நிலையில் மநாகராட்சியின் பணிகளும் பெருகிக் கொண்டே வருகிறது.

**மாநகராட்சியின் வருவாய் ஆதாரங்கள்**

- ✓ சொத்து மீதானவரி
- ✓ வாகனங்கள் மற்றும் விலங்குகள் மீதானவரி
- ✓ வாணிபம் மற்றும் வேலைவாய்ப்பு மீதானவரி
- ✓ திரையரங்கு வரி மற்றும் காட்சி வரி
- ✓ நகரத்திற்குள் கொண்டு வரும் பொருட்கள் மீதானவரிகள்
- ✓ விளம்பரங்கள் மீதானவரிகள்
- ✓ நுழைவு வரி மற்றும் முனைம வரி

சட்டத்திற்குட்பட்டு தங்கள் விருப்பப்படி அதிகபட்சமாகவோ அல்லது குறைந்தபட்ச விகிதமகவோ ஒரு நியாயமான அளவவில்வரி விதிக்க மற்றும் மாற்றியமைக்க சுதந்திரம் உள்ளது.

## 8. நிதிக் கொள்கை

- ✓ தற்காலஅரசுப் பேரினப் பொருளாதாரக் கொள்கையின் முக்கியக் கருவியாக நிதிக் கொள்கை உள்ளது. கீன்சின் 'புதிய பொருளாதாரம்' மற்றும் உலக பெருமந்தம் ஆகியவற்றால் நிதிக் கொள்கை முக்கியத்துவம் பெறுகிறது.

**நிதிக் கொள்கையின் பொருள்**

- ✓ பொதுவான கண்ணோட்டத்தில் நிதிக் கொள்கை என்பது உற்பத்தி, வேலைவாய்ப்பு, சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய பேரின பொருளாதார மாறிகளைப் பாதிக்கும் வரவு செலவு திட்டமதிப்பாகும்.

**வரைவிலக்கணங்கள்**

- ✓ ''நிதிக் கொள்கைஎனப்படுவது தேசிய வருமானத்தின் மீது விரும்பத்தகுந்த விளைவை ஏற்படுத்தவும் மற்றும் விரும்பத்தகாத விளைவுகளை தவிர்க்கவும் அரசின் வருவாய்மற்றும் செலவினங்கள் பற்றிய கொள்கையாகும். ''ஆர்தர் ஸ்மிதீஸ்.
- ✓ ''நிதிக் கொள்கை என்பது நாட்டின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு பயன்படுத்தப்படும் பொது நிதி அல்லது செலவு, வரி, பெறுதல்கள் மற்றும் நிதி நிர்வாகம் சார்ந்த கொள்கையாகும்''. – பியுளெர்

**நிதிக் கருவிகள்**

நிதிக் கொள்கையை சில நிதிக் கருவிகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. அரசின் செலவுகள், வரிவிதிப்பு மற்றும் கடன் பெறுதல் போன்றவை நிதிக் கருவிகள் ஆகும்.

- ✓ **வரிவிதித்தல்:** வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது. வரிகள் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கும். வரி அதிகரிப்பு செலவிடத்தக்க வருமானத்தை குறைக்கிறது. எனவே பணவீக்கத்தை கட்டுப்படுத்த வரியை அதிகப்படுத்த வேண்டும். மந்தகாலத்தில் வரிகள் குறைக்கப்படவேண்டும்.

- ✓ **பொதுச் செலவு:** பொதுச்செலவு பணியாளர்களின் கூலி மற்றும் சம்பளங்களை அதிகரிக்கும் போது பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான மொத்த தேவை உயருகிறது. ஆகையால் பொதுச்செலவு பின்னிறக்கம் மற்றும் பணவீக்கத்தை கட்டுப்படுத்தஉதவுகிறது.
- ✓ **பொதுக் கடன்:** அரசு, கடன் மூலம் பொது மக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது. அது பின்னர் மக்களுக்கு திரும்பவட்டியோடு செலுத்தப்படுகிறது. இதனால் அரசிடமிருந்து பணம் மக்களுக்கு மாற்றப்படுகிறது.

**நிதிக்கொள்கையின் நோக்கங்கள்**

- ✓ முழு வேலைவாய்ப்பு
- ✓ விலைநிலைத்தன்மை
- ✓ பொருளாதாரவளர்ச்சி
- ✓ சமமான பகிர்வு
- ✓ நாணய மாற்று வீதசமநிலை
- ✓ மூலதன உருவாக்கம்
- ✓ சமவட்டாரவளர்ச்சி

நிதிக் கொள்கை பின்வரும் நோக்கங்களைஅடைவதற்கு உதவுகின்றது.

**முழு வேலைவாய்ப்பு**

- ✓ முழு வேலைவாய்ப்பு என்பது வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் முக்கிய நோக்கமாகும். சமூக மேல்முதலீட்டில் பொதுச்செலவை மேற்கொள்வதால் வேலைவாய்ப்பை உருவாக்கமுடியும். இந்தியாவில் ஊரக வேலை வாய்ப்பு திட்டங்களாகிய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்கள் வேலைவாய்ப்பு பெருக்கத்தை உருவாக்கம் நோக்கமாக கொண்டுள்ளது,

**விலைநிலைத்தன்மை**

- ✓ விலைநிலையற்ற தன்மை மொத்த தேவை மற்றும் அளிப்புக்கிடையே சமமின்மையை ஏற்படுத்துகிறது, பொருட்களுக்கான தேவை அதிகரிப்பதால் பணவீக்கம் ஏற்படுகிறது. பொதுச் செலவு மூலம் உண்மை உற்பத்தி அதிகரித்து தேவையும் அளவுக்கு அதிகமாக அதிகரித்தால் பொதுச்செலவைக் குறைப்பதன் மூலம் இதனைத் தவிர்க்கலாம். தேவைக்கு மேல் உள்ள தேவையை வரிவிதிப்பதன் மூலம் தனிநபர் செலவு செய்யவதைக் குறைக்கலாம்.
- ✓ வரிக்குறைப்பு மற்றும் பொதுச்செலவு மூலம் மந்தத்தை எதிர்கொள்ளலாம். மந்தகாலத்தில் அரசு செலவை அதிகரித்து வரிவிதிப்பைக் குறைத்துக் கொள்ளும்.

**பொருளாதாரவளர்ச்சி:**

- ✓ ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி திறனை பெருக்க நிதிக் கொள்கை பயன்படுகிறது. வரியானது முதலீட்டை ஊக்குவிக்கும் கருவியாக பயன்படுகிறது. வரி விடுமுறை மற்றும் வரி தள்ளுபடிகள் புதிய தொழிற்சாலைகள் மூலம் முதலீட்டை தூண்டுகிறது. பொதுத்துறை முதலீடு அதிகரிக்கப்படும்போது தனியார் துறையினரால் நிரப்பமுடியாத இடைவெளியை நிரப்புகிறது. வரிகள் மூலம் வளங்களைத் திரட்டுவதில் பற்றாக்குறை ஏற்பட்டால் அரசு உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு கடன் மூலம் வளர்ச்சி திட்டங்களுக்கு நிதி அளிக்கிறது.

**சமமான பகிர்வு:**

- ✓ வளர்வீத வரி முறை பணக்கார மற்றும் ஏழை ஆகியோரிக்கிடையே உள்ள இடைவெளியை குறைக்க உதவுகிறது. வளர்வீதத்தில் பொதுச்செலவு அதிகரிப்பதன் மூலம் நலத்திட்டங்களாகிய இலவசகல்வி, பள்ளி குழந்தைகளுக்கான மதிய உணவு மற்றும் மான்யங்கள் போன்றவைகள் மூலம் ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துகிறது.

**நாணய மாற்று வீதசமநிலை**

- ✓ நாணய மாற்றுவீதத்தின் நகர்விற்கு ஏற்ப பன்னாட்டு வாணிபத்தின் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகிறது. வரி சலுகைகள் மற்றும் உதவித் தொகை வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை அதிகரிக்கிறது.

அத்தியாவசியமற்ற பொருட்களுக்கு சுங்கவரி விதிப்பதன் மூலம் இறக்குமதி செலவைக் குறைக்கிறது. கச்சாப்பொருட்கள் மற்றும் இயந்திரங்களுக்கான இறக்குமதி வரியைக் குறைப்பதன் மூலம் செலவைக் குறைத்து ஏற்றுமதியில் நிறுவனங்கள் போட்டியிட உதவுகிறது.

**மூலதன உருவாக்கம்**

- ✓ விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனத்திரட்சி மிக முக்கியமானதாகிறது. வரிச்சுமை குறைப்பானது, செலவிடத்தக்க வருமானத்தை அதிகரிக்கிறது மற்றும் சேமிப்பு மூலம் மூலதனதிரட்சியை ஏற்படுகிறது. அரசானது மின்சாரம் மற்றும் போக்குவரத்து போன்ற அடிப்படைத் துறைகளில் செலவிடும்போது அது தனியார் முதலீட்டைத் தூண்டுகிறது.

**சமவட்டாரவளர்ச்சி**

- ✓ பின்தங்கிய பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு நிதி ஊக்கம் வழங்கும் போது வட்டார வேறுபாடு குறைகிறது. பின்தங்கிய பகுதியில் தொழிற் பேட்டைகள் துவங்க பொதுச்செலவினை மேற்கொண்டால் அப்பகுதியின் வளர்ச்சி தூண்டப்படுகிறது.

**தொகுப்புரை**

- ✓ மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் மற்றும் செலவினங்களைப் பற்றி ஆராயும் அறிவியல் பொதுநிதியாகும். நவீனகாலத்தில் இந்த பாடமானது பொது வருவாய், பொதுச்செலவு, பொதுக் கடன், நிதி நிர்வாகம், மற்றும் நிதிக் கொள்கை ஆகிய ஐந்து முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது. எனவே பொதுநிதியானது வளர்ந்த மற்றும் பின் தங்கிய நாடுகளில் முக்கிய பங்காற்றுகிறது. முன்னேறிய நாடுகளில் தேவைக் குறைவினாலோ அல்லது அதிக தேவையினாலோ நிலையற்றதன்மை என்னும் பிரச்சினைகள் காணப்படும். பின்தங்கிய நாடுகளில் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு நிதிக் கொள்கை முக்கிய கருவியாக உள்ளது.
- ✓ நிதிக் கொள்கை உலக பொருளாதார பெருமந்தத்திற்குப் பின் மிகவும் பிரபலமானது. மந்தத்திலிருந்து விடுபட அரசின் தலையீடு தேவையென J.M.கீன்ஸ் வலியுறுத்தினார். அரசின் செலவிற்கும், தனியாரின் முதலீடு, வட்டி வீதம், நுகர்வு மற்றும் வருமானவளர்ச்சி ஆகியவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

## 9. நிதி நிர்வாகம்

**நிதி நிர்வாகத்தின் நோக்கங்கள்:**

- ✓ வளர்ந்த நாடுகளின் கட்டுப்படுத்த இயலாத சந்தை வளர்ச்சி நிதி நிர்வாகத்துக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தியுள்ளது. இச்சந்தைகள் நிதி பற்றாக்குறைகள், பெரும் கடன்சுமை, மூலதன நிதி பற்றாக்குறை இவையே இதன் பண்புகளாகும். அதேநேரம், நிலைத்த பொருளாதாரம், வளர்ச்சி, சுய – சார்பு, வருவாய் – செல்வப் பகிர்வு வீதத்தில் சமநிலை அனைத்துப் பகுதிகளில் வளர்ச்சி போன்றவற்றை இலக்காக கொண்டு நிதி கொள்கைகள், நிர்வாகம் ஆகிய துறைகளில் ஊக்கங்களை ஏற்படுத்தும் முனைப்பில் வளரும் நாடுகள் உள்ளன. அரசு விவகாரங்கள் மேலாண்மையில் அரசியல் கொள்கைகள், பொருளாதார வல்லமை முக்கியம் என்ற போதிலும் நிதி நிர்வாகமும் முக்கியத்துவம் வாய்ந்த பங்கினைக் கொண்டுள்ளது.
  - ✓ பொதுத்துறை நிறுவனங்கள் நிதி மேலாண்மை
  - ✓ திட்டங்கள், நிரல்கள் அமலாக்கம்
  - ✓ பொது நலன் மற்றும் சமூக பணிகளுக்கான வழிகள்
  - ✓ வளர்ச்சி, வேலை வாய்ப்பு, விலைவாசி கட்டுப்பாடு
  - ✓ மூலதன உருவாக்கம்
  - ✓ தேசிய நிதியை படைப்பாக்கத்துடன் முதலீடு செய்தல்
  - ✓ நாடாளுமன்ற செயல்முறைகளை சீராக்குதல்
  - ✓ சமத்துவமும் சமபங்கும்

**நிதி நிர்வாகக் கோட்பாடுகள்:**

- ✓ பொது நலன், மக்கள் தேர்வு, மக்கள் கொள்கை ஆகியனவற்றை முதன்மையாகக் கொண்ட கொள்கை
- ✓ அரசியல் வழிகாட்டுதல் மற்றும் கட்டுபாட்டுக் கோட்பாடு
- ✓ தொடர்புக் கோட்பாடு
- ✓ நிறுவனத்தினையும் மேலாண்மையையும் ஒருங்கிணைக்கும் கோட்பாடு
- ✓ நீடித்த தன்மை, சமநிலை கோட்பாடு
- ✓ எளிமை, நெகிழ்வுத்தன்மை கோட்பாடு
- ✓ நடத்தை, ஒழுக்கம், சீர்மை கோட்பாடு
- ✓ மக்கள் நம்பிக்கை, கடமைப்பாடு கோட்பாடு

**இந்திய நிதி நிர்வாக வரலாற்றின் நான்கு முக்கியக் கால கட்டங்கள்:**

- ✓ காலகட்டம் 1 (1765 – 1858) – அமைப்பு உருவாக்கம் மற்றும் ஸ்திரப்படுத்துதல்
- ✓ காலகட்டம் 2 (1860- 1919) – முறைமைகள், செயல்பாடுகள் மேம்பாடு
- ✓ காலகட்டம் 3 (1919 – 1947) – மக்களாட்சிப் படுத்துதல், அதிகாரப்பரவலாக்கல்
- ✓ காலகட்டம் 4 (1950 முதல் இன்றுவரை) – மக்கள்மயப்படுத்துதல்

**புதிய வளரும் போக்குகள் – இந்திய நிதி நிர்வாகம்:**

- ✓ நிதிப்பற்றாக்குறையை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல்.
- ✓ வளர்ச்சிசாராசெலவினங்களைக் குறைத்தல்.
- ✓ பற்றாக்குறை இல்லா (ஜீரோ பேஸ்) நிதிநிலை கண்ணோட்டம் உருவாதல்.
- ✓ பொதுத் துறை மீதான அழுத்தம் குறைத்தல்.
- ✓ மக்கள் நலன்கள், பணிகளில் அதிகாரவர்க்க மனோநிலை நீக்கம்.
- ✓ நிதி மேலாண்மை திட்டங்களில் மைய நீக்க பொறுப்புணர்வில் கவனப்படுத்துதல்.
- ✓ தாராளமயம், கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

**நிதிநிலை அறிக்கை தாக்கலும் அமலாக்கமும்**

**நிதிநிலை அறிக்கை சுற்று:**

ஒரு நிதிநிலை அறிக்கையின் செயலாக்கம் அதற்கான சட்டம் இயற்றும் நடைமுறைகளைக் கணக்கில் கொண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் ஒரு காலச்சுற்று முறையைக் கணக்கில் கொள்கிறது. நிதிநிலை அறிக்கை நாடாளுமன்ற ஒப்புதல் பெறுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

காலச்சுற்று கீழ்க்காணும் கட்டங்களைக் கொண்டுள்ளது:

- ✓ தயாரிப்பு மற்றும் தாக்கல்
- ✓ ஒப்புதல்
- ✓ நிர்வாகம், தணிக்கை

ஒரு குறிப்பிட்ட காலத்தில் பல சுற்றுகள் நடைபெறலாம். மீறப்படலாம். பல சுற்றுப்பிரிவுகள் வெவ்வேறு காலகட்டங்களைக் கொண்டுள்ளன.

**நிதிநிலை அறிக்கை தாக்கல்:**

- ✓ நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் செயல்முறைகள், நிதிநிலை அறிக்கை தாக்கல் காலத்திலிருந்து ஆறு மாதங்கள் முன்பாக, பொதுவாக செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில், நிதி அமைச்சகத்திடமிருந்து சுற்றறிக்கை பெறப்பட்டதும் தொடங்குகிறது. அந்த சுற்றறிக்கை நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் திட்டம் சார் அம்சங்கள், திட்டம் சாரா அம்சங்கள், வழிகாட்டுதல்கள் என ஒவ்வொன்று குறித்தும் இறுதி மதிப்பீடுகள் சமர்பிக்க தொடர்புடைய துறைகளுக்கு ஒரு கால அளவை நிர்ணயம் செய்து அறிவிக்கும். பொதுவான விதி என்னவென்றால் யார் நிதியை செலவளிக்கப்போ கிறார்களோ அவர்களே நிதிநிலை மதிப்பீடுகளையும் உருவாக்க வேண்டும் என்பது ஆகும். நிதி அறிக்கை முன்மொழிவுகள் கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டிருக்கும்.

- ✓ கணக்குகள் வகைமைப்படுத்துதல்
- ✓ நடப்பு ஆண்டின் நிதிநிலை மதிப்பீடுகள்
- ✓ நடப்பு ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகள்
- ✓ கடந்த ஆண்டின் அசல் செலவினங்கள் 5 அடுத்த நிதி ஆண்டுக்கான முன்மொழிவுகள் மதிப்பீடுகள்


**நிதி ஆண்டு**

- ✓ 1860இல் முதல் நவீன நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது நிதி ஆண்டு என்பது மே 1 முதல் ஏப்ரல் 30 வரை என்பதாக இருந்தது. இது 1866-இல் இங்கிலாந்து அரசின் நடைமுறையை ஒட்டி ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை என மாற்றிக் கொள்ளப்பட்டது.

**அமர்த்தியா சென் – ஜெகதீஷ் பகவதி இரு மேதைகளின் விவாதம்**

- ✓ பொருளாதார கொள்கை குறித்த விவாதங்கள் இன்று நடப்பதுபோல் என்றும் நடந்ததில்லை. உலக பொருளியல் கல்விப் புலத்தில் இரு பெரும் வல்லுனர்கள் எனக் கருதப்படும் அமர்த்தியா சென் – ஜெகதீஷ் பகவதி இருவரும் இந்திய ஆளும் அமைப்பு எதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என கடும் விவாதங்களில் ஈடுபட்டனர். ஹார்வர்டு பல்கலைக்கழக பொருளாதார, தத்துவ துறை பேராசிரியர் சென் பொருளாதாரத்துக்கான நோபல் விருது பெற்றவர். கொலம்பியா பல்கலைக்கழக பொருளாதார பேராசிரியர் பகவதி உயர் விருதுகளுக்காகப் பல முறை பரிந்துரைக்கப்பட்டவர். இருவருடன் அவினேஷ் தீட்சித் என மூவரும் இந்தியாவின் தலைசிறந்த பொருளியல் அறிஞர்களா கக் கருதப்படுகிறார்கள்.
- ✓ சென் – பகவதி விவாதங்கள் இந்திய அரசியல் தலைவர்கள் மத்தியில் பெரும் கேள்விகளை எழுப்பின.
- ✓ மக்களின் உற்பத்தித் திறனும் வளர்ச்சியும் அதிகரிக்க வேண்டுமானால் இந்தியா தனது சமூக கட்டமைப்பில் அதிக முதலீடு செய்யவேண்டும் என சென் வலியுறுத்தினார். பொருளாதார வளர்ச்சி அதிகரித்தால் மட்டுமே போதும்; அதன்மூலம் சமூகத் திட்டங்கள் தொடங்கத் தேவையான மூலதனம் கிடைத்துவிடும் என பகவதி வாதிட்டார். மனித செயலாற்றலை அதிகரிக்க சுகாதாரம் மற்றும் கல்வியில் அதிக முதலீடு தேவை என்பது சென் சிந்தனையின் மையமாக இருக்கிறது. இத்தகைய முதலீடுகள் இல்லாமல் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க முடியாது என சென் நம்புகிறார். ஆனால் வளர்ச்சியால் தொடக்கத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரிக்கலாம்; ஆனால், தொடர் வளர்ச்சி மூலம் அரசுக்கு தேவையான வளங்கள் பெருகும். மறு பகிர்வு மூலம் தொடக்க ஏற்றத்தாழ்வினைக் கட்டுப்படுத்த முடியும் என பகவதி கூறுகிறார்.

## 10. இந்தியாவின் வரிவகைகள்





**ஜி.எஸ்.டி அளவு:**

- ✓ ஜி.எஸ்.டி வரி அளவு 5% – ஸ்கீம்மர், பால் பவுடர், மீன் உரங்கள், தேயிலை உள்ளிட்டவை.

- ✓ ஜி.எஸ்.டி வரி அளவு 12% – வெண்ணெய், பாலாடைக்கட்டி, ஊறுகாய், பழச்சாறுகள், பற்பசை, மருத்துவம்.
- ✓ ஜி.எஸ்.டி வரி அளவு 18% – பனிக்கூழ், கைப்பெட்டி, குடிநீர், கைகடிகாரம், கதவு.
- ✓ ஜி.எஸ்.டி வரி அளவு 28% – பான் மசாலா, சலவை இயந்திரம், வெற்றிட சுத்தப்படுத்திகள், இயந்திர வாகனங்கள், இயந்திர மிதிவண்டி.
- ✓ ஜி.எஸ்.டி–க்குள் வராத பொருள்கள்
- ✓ சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல், வான் எரிபொருள், இயற்கை எரிவாயு, மது ஆகியவை.

**பொருள்கள் விநியோகம் அல்லது சேவைகள் வழங்குதல் (பொருள்கள் மற்றும் சேவை வரி – G.S.T)**




## 11. 15வது நிதிக் கமிஷன் பரிந்துரைகள்

**செங்குத்து அதிகாரப் பகிர்வை 41% இல் பராமரித்தல்:**

- ✓ 2020-21 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் உள்ள அதே செங்குத்து அதிகாரப்பகிர்வை 41% ஆக பராமரிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- ✓ இது கணிக்கக்கூடிய தன்மையைப் பேணுவதற்கும் வளங்களை உறுதிப்படுத்துவதற்கும் உதவும், குறிப்பாக கோவிட் காலங்களில்.
- ✓ இது 14வது எஃப்சி பரிந்துரைத்த 42% வகுக்கக்கூடிய குளத்தின் அதே அளவில் உள்ளது. இருப்பினும், முந்தைய ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தின் புதிய யூனியன் பிரதேசங்களான லடாக் மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலமாக மாற்றப்பட்டதன் காரணமாக, தேவையான 1% சரிசெய்தலை அது செய்துள்ளது.

**ஜிஎஸ்டியில்:**

- ✓ யூனியனின் மொத்த வரி வருவாயில் 35% ஜிஎஸ்டி.
- ✓ மாநிலங்களின் சொந்த வரி வருவாயில் சுமார் 44% ஜிஎஸ்டி.
- ✓ மொத்த வரி வருவாய்:
  - i. 2016-17 புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில், ஜிஎஸ்டி செஸ் வசூலைத் தவிர்த்து, மொத்த வரி வருவாயில் 1.7% புள்ளிகள் குறைந்துள்ளது.
  - ii. இந்த வீழ்ச்சியின் தாக்கம் மாநிலங்களுக்கான வரிப் பகிர்வில் காணப்பட்டது.
- ✓ மொத்த வரி வருவாய் மதிப்பீடு 2021-26:

i. இது 135.2 லட்சம் கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, இதில் வகுக்கக்கூடிய தொகுப்பு 103 லட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**கிடைமட்டப் பகிர்வில்:**

1. கிடைமட்டப் பகிர்வுக்கு ஒதுக்கப்பட்ட அளவுகோல்கள் மற்றும் எடைகள்:
   - ✓ மக்கள் தொகை: 15%
   - ✓ பகுதி: 15%
   - ✓ காடு & சூழலியல்: 10%
   - ✓ வருமான தூரம்: 45%
   - ✓ வரி மற்றும் நிதி முயற்சிகள்: 2.5%
   - ✓ மக்கள்தொகை செயல்திறன்: 12.5%
2. நிதிச் செயல்பாட்டிற்கு வெகுமதி அளிக்கும் வகையில் வரி முயற்சி அளவுகோலையும் ஆணையம் மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது.

## 12. வருவாய் பற்றாக்குறை மானியங்கள் (RDG):

- ✓ வருவாய் பற்றாக்குறை மானியங்கள் மாநிலங்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியத்தில் இருந்து வெளிவருகின்றன, அவை அவற்றின் சொந்த வரி மற்றும் வரி அல்லாத ஆதாரங்கள் மற்றும் அவர்களுக்கு வரிப் பகிர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்ட பிறகும், பூர்த்தி செய்யப்பட வேண்டிய வருவாய்க் கணக்குகள்.
- ✓ வருவாய் பற்றாக்குறை என்பது வருவாய் அல்லது நடப்பு செலவு மற்றும் வருவாய் ரசீதுகளுக்கு இடையே உள்ள வித்தியாசம் என வரையறுக்கப்படுகிறது, இதில் வரி மற்றும் வரி அல்லாதவை அடங்கும்.
- ✓ அதிகாரப் பகிர்வுக்குப் பிந்தைய வருவாய்ப் பற்றாக்குறை மானியங்கள் சுமார் ரூ. 26ஆம் நிதியாண்டில் முடிவடைந்த ஐந்தாண்டு காலத்தில் 2.94 லட்சம் கோடிகள்.
- ✓ வருவாய்ப் பற்றாக்குறை மானியங்களுக்குத் தகுதிபெறும் மாநிலங்களின் எண்ணிக்கை, விருதுக் காலத்தின் முதல் ஆண்டான FY22 இல் 17 ஆக இருந்து, கடந்த ஆண்டு FY26 இல் 6 ஆகக் குறைந்தது.

**துறை சார்ந்த மானியங்கள்:**

- ✓ எட்டு துறைகளுக்கு மாநிலங்களுக்கு 1.3 லட்சம் கோடி ரூபாய் துறை சார்ந்த மானியங்கள் வழங்கப்படும்:
  - ✓ உடல்நலம்,
  - ✓ பள்ளிக் கல்வி,
  - ✓ மேற்படிப்பு,
  - ✓ விவசாய சீர்திருத்தங்களை செயல்படுத்துதல்,
  - ✓ PMGSY சாலைகள் பராமரிப்பு,
  - ✓ நீதித்துறை,
  - ✓ புள்ளிவிவரங்கள், மற்றும்
  - ✓ ஆர்வமுள்ள மாவட்டங்கள் மற்றும் தொகுதிகள். இந்த மானியங்களில் ஒரு பகுதி செயல்திறன் சார்ந்ததாக இருக்கும்.

**மாநிலம் சார்ந்த மானியங்கள்:**

- ✓ 49,599 கோடி ரூபாய்க்கான மாநில-குறிப்பிட்ட மானியங்களை ஆணையம் பரிந்துரைத்தது. இவை பின்வரும் பகுதிகளில் வழங்கப்படும்:
  - ✓ சமூக தேவைகள்,
  - ✓ நிர்வாக நிர்வாகம் மற்றும் உள்கட்டமைப்பு,

    - ✓ தண்ணீர் மற்றும் சுகாதாரம்,
    - ✓ கலாச்சாரம் மற்றும் வரலாற்று நினைவுச்சின்னங்களைப் பாதுகாத்தல்,
    - ✓ அதிக விலை உடல் உள்கட்டமைப்பு, மற்றும்
    - ✓ சுற்றுலா.
- ✓ மாநில-குறிப்பிட்ட மற்றும் துறை சார்ந்த கிரான்களின் பயன்பாட்டை மதிப்பாய்வு செய்யவும் கண்காணிக்கவும் மாநில அளவிலான உயர்மட்டக் குழுவை ஆணையம் பரிந்துரைத்தது.

**மையத்திற்கான நிதி இடம்:**

- ✓ மொத்த 15வது நிதிக் கமிஷன் இடமாற்றங்கள் (பகிர்வு + மானியங்கள்) யூனியனுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் வரவுகளில் சுமார் 34% ஆகும், அதன் வளத் தேவைகள் மற்றும் தேசிய வளர்ச்சி முன்னுரிமைகள் மீதான செலவுக் கடமைகளைப் பூர்த்தி செய்ய போதுமான நிதி இடத்தை விட்டுச்செல்கிறது.

**உள்ளாட்சி அமைப்புகளில்:**

- ✓ ரூ. 4, 36,361 கோடி என்பது உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2021-26 ஆம் ஆண்டுக்கான மொத்த மானியம். மொத்த மானியத்தில்; பகிர்ந்தளிக்கப்பட்ட நகராட்சி சேவைகளுக்கு ரூ.450 கோடி அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் கிராமம், தொகுதி மற்றும் மாவட்டம் ஆகிய மூன்று அடுக்கு பஞ்சாயத்துகளுக்கும் கிடைக்கும்.
- ✓ கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்:
    - ✓ மொத்தம் ரூ. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2, 36,805 கோடி மானியம்.
- ✓ நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்:
    - ✓ நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த மானியம் ரூ.1, 21,055 கோடி.
    - ✓ இந்த மொத்த மானியங்களில், ரூ. 8,000 கோடி புதிய நகரங்களை அடைவதற்கான செயல்திறன் அடிப்படையிலான மானியம் மற்றும் ரூ. 450 கோடி பங்கு நகராட்சி சேவைகள்.
    - ✓ நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மக்கள்தொகை அடிப்படையில் இரண்டு குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் அவற்றின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் அபிலாஷைகளின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் மானியங்கள் வழங்குவதற்கு வெவ்வேறு விதிமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
    - ✓ ஒரு மில்லியனுக்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகரங்கள்/நகரங்களுக்கு மட்டுமே அடிப்படை மானியங்கள் முன்மொழியப்படுகின்றன. மில்லியன்-பிளஸ் நகரங்களுக்கு, 100% மானியங்கள் மில்லியன்-பிளஸ் சிட்டிஸ் சேலஞ்ச் ஃபண்ட் (எம்சிஎஃப்) மூலம் செயல்திறன்-இணைக்கப்பட்டவை.
    - ✓ MCF தொகை இந்த நகரங்களின் காற்றின் தரத்தை மேம்படுத்துவதிலும், நகர்ப்புற குடிநீர் விநியோகம், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான சேவை நிலை அளவுகோல்களை பூர்த்தி செய்வதிலும் இணைக்கப்பட்டுள்ளது.
- ✓ உள்ளாட்சி அமைப்புகள் மூலம் சுகாதாரத்திற்கான மானியங்கள் வழங்கப்பட வேண்டும்:
    - ✓ ரூ. 70,051 கோடி என்பது உள்ளூர் அரசாங்கங்களுக்கான சுகாதார மானியத்தைக் குறிக்கிறது.
    - ✓ சுகாதார மானியங்கள் வழங்கப்படும்:
- ✓ கிராமப்புற துணை மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை (PHCs) சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்களாக (HWCs) மாற்றுதல்,
- ✓ ஆரம்ப சுகாதார நடவடிக்கைகளுக்கான கண்டறியும் உள்கட்டமைப்புக்கான ஆதரவு, மற்றும்
- ✓ நகர்ப்புற HWCகள், துணை மையங்கள், PHCகள் மற்றும் தொகுதி அளவில் பொது சுகாதார பிரிவுகளுக்கான ஆதரவு.

    - ✓ உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் (சுகாதார மானியங்கள் தவிர) மக்கள்தொகை மற்றும் பரப்பளவு அடிப்படையில் மாநிலங்களுக்கு முறையே 90% மற்றும் 10% வெயிட்டேஜுடன் பகிர்ந்தளிக்கப்படும்.
    - ✓ இந்த மானியங்களைப் பெறுவதற்கு (சுகாதார மானியங்கள் தவிர) சில நிபந்தனைகளை ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
- ✓ நுழைவு-நிலை அளவுகோல்கள் பின்வருமாறு:
    - ✓ பொது களத்தில் தற்காலிக மற்றும் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை வெளியிடுதல்,
    - ✓ மாநிலங்களால் சொத்து வரிகளுக்கான குறைந்தபட்ச அடுக்கு விகிதங்களை நிர்ணயித்தல் மற்றும் சொத்து வரிகளை வசூலிப்பதில் முன்னேற்றம் (நகர்ப்புற அமைப்புகளுக்கு 2021-22 க்குப் பிறகு கூடுதல் தேவை).
- ✓ மார்ச் 2024க்குப் பிறகு மாநில நிதிக் குழுவை அமைத்து அதன் பரிந்துரைகளின்படி மாநிலம் செயல்படவில்லை என்றால், மாநிலத்தின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியங்கள் எதுவும் வெளியிடப்படாது.

**உடல்நலம்**

- ✓ 2022 ஆம் ஆண்டிற்குள் சுகாதாரத்திற்கான மாநில செலவினத்தை 8% அதிகரிக்க ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
- ✓ UPSC சிவில் சர்வீசஸ் மாதிரியில் அகில இந்திய சுகாதார சேவைகள்/அனைத்திந்திய மருத்துவ சேவைகளை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்க ஆணையம் பரிந்துரைத்தது.
- ✓ MBBS மருத்துவர்களுக்கு ஆரோக்கிய மருத்துவமனை, அடிப்படை அறுவை சிகிச்சை முறைகள், மயக்க மருந்து, மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், கண், ENT போன்ற சிறிய படிப்புகளை உருவாக்க தேசிய மருத்துவ கவுன்சில் பரிந்துரைக்கப்படுகிறது.
- ✓ மருத்துவ இளங்கலை பட்டதாரிகளுக்கு ஆயுஷ் தேர்வு பாடமாக ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- ✓ தொடர்புடைய மற்றும் சுகாதாரத் தொழில்கள் மசோதா விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும்.

**உயர் கல்வி**

- ✓ 15வது நிதிக்குழு உயர்கல்வி மானியங்களில் இரண்டு துணை வகைகளை பரிந்துரைத்துள்ளது:
- ✓ ஆன்லைன் கல்வியை மேம்படுத்துதல்:
    - ✓ ரூ. 5,078 கோடி என்பது ஆன்லைன் கல்வியை மேம்படுத்துவதற்கான மொத்த மானியத் தொகையாகும்.
- ✓ பிராந்திய மொழிகளில் தொழில்முறை படிப்புகளை உருவாக்குதல்:
    - ✓ கமிஷனின் பரிந்துரை புதிய கல்விக் கொள்கை 2020 க்கு ஏற்ப உள்ளது. ரூ. 2021-26 முதல் இந்தப் படிப்புகளை மேம்படுத்த 1,065 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
    - ✓ ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள இரண்டு கல்லூரிகள் தங்கள் கற்றல் பொருள் மற்றும் கற்பித்தலை அங்கீகரிக்கப்பட்ட பிராந்திய மொழியாக மாற்ற வேண்டும்.

**பாதுகாப்பு**

- ✓ உலகளாவிய சூழலில் தேசிய பாதுகாப்பிற்கான தற்போதைய மூலோபாயத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, 15வது எஃப்சி, அதன் அணுகுமுறையில், மொத்த வருவாய் வரவுகளில் யூனியன் மற்றும் மாநிலங்களின் தொடர்புடைய பங்குகளை மறு அளவீடு செய்துள்ளது.
- ✓ 15வது எஃப்சி முன்மொழிந்துள்ள சிறப்பு நிதியளிப்பு பொறிமுறைக்கான ஆதாரங்களை யூனியன் ஒதுக்கி வைக்க இது உதவும்.
- ✓ மத்திய அரசு, இந்தியாவின் பொதுக் கணக்கில், ஒரு பிரத்யேக செலவழிக்க முடியாத நிதி, பாதுகாப்பு மற்றும் உள் பாதுகாப்புக்கான நவீனமயமாக்கல் நிதி (MFDIS) இல் அமைக்கலாம்.

- ✓ 2021-26 காலப்பகுதியில் முன்மொழியப்பட்ட MFDIS இன் மொத்த குறிகாட்டி அளவு ரூ. 2, 38,354 கோடி.

**பேரிடர் இடர் மேலாண்மை**

- ✓ பதினைந்தாவது நிதிக் குழு, மாநில பேரிடர் அபாய நிதியில் (SDRF) மாநிலங்களின் பங்களிப்பை NE மாநிலங்கள் (10%) தவிர 25% ஆக இருக்குமாறு பரிந்துரைத்தது.
- ✓ அதே ஏற்பாட்டை 13வது நிதி ஆணையம் பரிந்துரைத்ததில் இருந்து எந்த மாற்றமும் இல்லை.
- ✓ மத்திய மற்றும் மாநில அளவில் தணிப்பு நிதிகளை உருவாக்குதல். இடர்களைக் குறைக்கும் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த குடியேற்றங்கள் மற்றும் வாழ்வாதார நடைமுறைகளை ஊக்குவிக்கும் உள்ளூர் நிலை மற்றும் சமூகம் சார்ந்த தலையீடுகளுக்கு தணிப்பு நிதி பயன்படுத்தப்பட வேண்டும்.
- ✓ 2021-26 காலப்பகுதியில் பேரிடர் மேலாண்மைக்காக மாநிலங்களுக்கு ரூ.1, 60,153 கோடியை 15வது எஃப்சி பரிந்துரைத்துள்ளது, இதில் யூனியனின் பங்கு ரூ. 1, 22,601 கோடி மற்றும் மாநிலங்களின் பங்கு ரூ. 37,552 கோடி.
- ✓ மொத்தத் தொகையான ரூபாய்க்கு ஆறு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை பரிந்துரைத்துள்ளது. சில முன்னுரிமைப் பகுதிகளுக்கு 11,950 கோடி
    - ✓ NDRF இன் கீழ் இரண்டு (தீயணைப்பு சேவைகளின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் மற்றும் அரிப்பினால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம்) மற்றும்
    - ✓ NDMF இன் கீழ் நான்கு (பன்னிரண்டு அதிக வறட்சி பாதிப்புள்ள மாநிலங்களுக்கு வினையூக்க உதவி, பத்து மலை மாநிலங்களில் நில அதிர்வு மற்றும் நிலச்சரிவு அபாயங்களை நிர்வகித்தல், ஏழு அதிக மக்கள் தொகை கொண்ட நகரங்களில் நகர்ப்புற வெள்ள அபாயத்தைக் குறைத்தல் மற்றும் அரிப்பைத் தடுக்கும் தணிப்பு நடவடிக்கைகள்).

## 13. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (Goods and Services Tax (GST))

நாடு முழுவதும் சரக்குகள் மற்றும் சேவைகளில் மறைமுக வரியாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்பட்டுள்ளது. இது ஒரு விரிவான, பல கட்ட இலக்கு அடிப்படையிலான மதிப்பு கூட்டுவரியாகும்.

- ✓ CGST – மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (சி.ஜி.எஸ்.டி CGST): மத்திய அரசால் உள்நாட்டில் விற்கப்படும் விற்பனையின் மீது வசூலிக்கப்படும் வரியாகும் ((எ.கா) தமிழ்நாட்டில் நடக்கும் பரிவர்த்தனை))
- ✓ SGST – மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (எஸ்.ஜி.எஸ்.டி SGST): மாநில அரசால் உள்நாட்டில் விற்கப்படும் விற்பனையின் மீது வசூலிக்கப்படும் வரியாகும், (எ.கா. தமிழ்நாட்டிற்குள் நடக்கும் பரிவர்த்தனை).
- ✓ IGST – ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஐ.ஜி.எஸ்.டி IGST): மாநில அரசு விற்பனைக்கு மத்திய அரசால் வசூலிக்கப்படும் வரியாகும் (எ.கா. பஞ்சாபிலிருந்து தமிழ்நாட்டிற்கு)

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக் (Goods and Services Tax council) என்பது, சரக்குகள் மற்றும் சேவை வரி தொடர்பான பிரச்சினைகள் தீர்ப்பது தொடர்பாக மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு பரிந்துரைகளை வழங்கும் ஒரு அரசியலமைப்பு ஆகும். சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்குழுவின் தலைவராக நிதி மந்திரி. இதர உறுப்பினர்களாக மாநிலங்கள் வருவாய் அல்லது நிதி அமைச்சர்கள், அல்லது நிதி அமைச்சர் பொறுப்பு வகிப்பவர்கள் மற்றும் அனைத்து வரிகள் துறை அமைச்சர்கள் இருப்பார்கள்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குழு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு பரிந்துரைகளை வழங்கும். அவை பின்வருமாறு,

- ✓ சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகளில் உட்படுத்தப்படக்கூடிய மத்திய, மாநிலங்கள் மற்றும் உள்ளூர் அமைப்புகளால் விதிக்கப்படும் வரி, செஸ் (CESSES) மற்றும் கூடுதல் கட்டணம்.

- ✓ சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விலக்கு, மேல்வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள்.
- ✓ மாதிரி பொருட்கள் மற்றும் சேவைகள் வரிச்சட்டங்கள் சேவைகள் வரியில் உள்நாட்டிற்கு கொடுக்கப்பட வேண்டிய, மூலதனத்தீர்வை, மாநிலங்களுக்கு இடையேயான விற்பனை மீது விதிக்கப்படும் வரி பங்கீடு அல்லது வணிக வரிசட்ட பிரிவு 269A-ன் படி வழங்கப்படவேண்டிய மூலதனத் தீர்வை ஆகியவை ஆகும்.
- ✓ சரக்குகள் மற்றும சேவைகள் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் விற்று முதல் நுழைவுத் திறனின் எல்லை வரம்பு பொருட்கள் மற்றும் சேவைகள் வரிகளின் தரவரிசைகளின் தரவிகிதங்கள் உட்பட.
- ✓ பொருட்கள் சேவை வரிகளின் தரவரிசைகளின் தர விகிதங்கள் உட்பட.
- ✓ ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான எந்த சிறப்பு வரி விகிதம் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்ள வரி விகிதங்கள், இயற்கை பேரழிவு அல்லது பேரழிவின் போது கூடுதல் வளங்களை உயர்த்த.
- ✓ அருணாச்சல பிரதேசம், அசாம், ஜம்மு காஷ்மீர், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, ஹிமாசல பிரதேசம் மற்றும் உத்தரகண்ட் போன்ற மாநிலங்களுக்கு சிறப்பு ஒதுக்கீடு, சரக்குகள் மற்றும் சேவை வரி தொடர்பான வேறு எந்த விஷயங்களை, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குழு தீர்மானிக்கும்.

### நோக்கம் (Purpose)

- ✓ டாட்டா குழுவில் நாங்கள் சேவை செய்யும் சமூகங்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நாங்கள் செயல்படுகின்ற வணிகத் துறைகளில் தலைமை மற்றும் உலகளாவிய போட்டித்திறனைத் தூண்டுவதன் மூலம் இதைச் செய்வோம். நாங்கள் சம்பாதிப்பது என்னவென்றால் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள் மற்றும் சமூகம் ஆகியவற்றில் நம்பிக்கையை ஏற்படுத்துவது. நாங்கள் எங்கள் வணிகத்தை நடத்தும் முறையில்தான் தலைமைத்துவத்தின் பாரம்பரியத்தை பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறோம்.

### தன் மதிப்பு (Core values)

டாடா நிறுவனம் எப்பொழுதும் மதிப்புகளின் இயக்கப்படுகிறது. இந்த மதிப்புகள் டாடா நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் வர்த்தகத்தை தொடர்ந்து இயக்குகின்றன. நாங்கள் செய்யும் வியாபாரத்தை ஆதரிக்கும் ஐந்து முக்கிய மதிப்புகள் பின்வருமாறு.

- ✓ ஒருமைப்பாடு (Integrity): நேர்மையான, வெளிப்படையான மற்றும் ஒழுக்கமானதாக இருக்க வேண்டும். நாம் செய்யும் அனைத்தையும் பொதுமக்கள் கண்காணிப்பின் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
- ✓ உயர்ந்ததரம் (Excellence): உயர்ந்த தரத்தை அடைவதைப் பற்றியும் எப்போதும் தகுதி வாய்ந்ததாக வளர வேண்டும் என்பதையும் நாம் உணர்ச்சிகரமாக உணர வேண்டும்.
- ✓ ஒற்றுமை (Unity): எங்கள் முதலீடு மற்றும் கூட்டாளிகள், தொடர்ச்சியான கற்றல், மற்றும் நம்பிக்கை மற்றும் பரஸ்பர மரியாதை அடிப்படையில் அக்கறை மற்றும் கூட்டு உறவுகளை உருவாக்குதல்.
- ✓ பொறுப்பு (Responsibility): நாம் நமது தொழில்களில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக கொள்கைகளை ஒருங்கிணைப்போம். மக்கள் திரும்பி வருவதை உறுதி செய்வோம்.
- ✓ முன்னோடியாகுதல் (Pioneering): தைரியமான மற்றும் சுறுசுறுப்பான, தைரியமாக சவால்களை எடுத்து, புதுமையான தீர்வுகளை உருவாக்க ஆழமான வாடிக்கையாளர் நுண்ணறிவைப் பயன்படுத்துவோம்.
- ✓ தொலைநோக்கு பார்வை (Mission): நம்பிக்கையுடன் தலைமைத்துவத்தின் அடிப்படையில் பங்கேற்பாளர் மதிப்பு உருவாவதன் மூலம நாம் உலகளாவிய சேவையை வழங்குகின்ற சமூகங்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவோம்.